திருமணத்துக்காக தனி ஹெலிகாப்டரில் அழைத்துவரப்பட்ட பிஎஸ்எஃப் வீரர்!

ஸ்ரீநகர், ஏப். 28: தொலைதூரப் பகுதியில் பணியாற்றி வரும் எல்லைப் பாதுகாப்பு படை (பிஎஸ்எஃப்) வீரர், தனது திருமணத்துக்கு உரிய நேரத்தில் செல்வதற்காக சிறப்பு விமானத்தில் அழைத்துவரப்பட்டார்.

இதுகுறித்து பிஎஸ்எஃப் அதிகாரிகள் கூறியதாவது:

பாகிஸ்தானுடனான கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டுக்கு அருகே உயரமான மாசில் பகுதியில் காவல் பணியில் ஈடுபட்டு வந்த நாராயணா பெஹேராவுக்கு (30) அவரது சொந்த ஊரில் அடுத்த மாதம் 2-ஆம் தேதி திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

எனினும், அவர் பணியாற்றி வரும் பகுதியை ஸ்ரீநகருடன் இணைக்கும் சாலையில் பனி மூடியுள்ளதால் அவரால் அங்கிருந்து உடனடியாக வெளியேற முடியாத சூழல் நிலவி வருகிறது. எனவே, எல்லா ஏற்பாடுகளையும் செய்த பிறகும் மணமகன் வர முடியாமல் திருமணம் நின்றுவிடும் நிலை உள்ளதாக நாராயணா பெஹேராவின் பெற்றோர் அவரது உயரதிகாரியிடம் முறையிட்டனர்.

இதுகுறித்து தகவலறிந்த பிஎஸ்எஃப் காஷ்மீர் பிரிவு ஐ.ஜி. ராஜா பாபு சிங், எல்லைப் பகுதியிலிருந்து சிறப்பு ஹெலிகாப்டர் மூலம் நாராயணா பெஹேராவை உடனடியாக அழைத்துவர உத்தரவிட்டார். அதையடுத்து, ஹெலிகாப்டரில் ஸ்ரீநகருக்கு வியாழக்கிழமை அழைத்துவரப்பட்ட பெஹேரா, ஒடிஸா மாநிலத்திலுள்ள தனது கிராமத்துக்கு பயணத்தைத் தொடங்கினார்.

தனது படையினரின் நலன்களுக்கு ஐ.ஜி. ராஜா பாபு சிங் முழு முன்னுரிமை அளிப்பதன் காரணமாக, பெஹேராவை சிறப்பு ஹெலிகாப்டரில் அழைத்து வருவதற்கு அவர் உத்தரவிட்டார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

காஷ்மீரில் 2 பயங்கரவாதிகள் சுட்டுக் கொலை

ஸ்ரீநகர், ஏப்.28: காஷ்மீரில் அண்மையில் வெளிமாநிலத் தொழிலாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் தொடர்புடைய அல்-பதர் பயங்கரவாதிகள் 2 பேர், பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதுகுறித்து காவல் துறை செய்தித் தொடர்பாளர் வியாழக்கிழமை கூறியதாவது: புல்வாமா மாவட்டத்தில் உள்ள மித்ரிகம் கிராமத்தில் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக ரகசியத் தகவல் கிடைத்ததை அடுத்து, பாதுகாப்புப் படையினர் அந்தப் பகுதிக்கு புதன்கிழமை சென்று சுற்றி வளைத்தனர்.

பாதுகாப்புப் படையினர் நெருங்கி விட்டதை அறிந்த பயங்கரவாதிகள், அவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். பதிலுக்கு பாதுகாப்புப் படையினரும் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில், பாதுகாப்புப் படை வீரர் ஒருவர் காயமடைந்ததை அடுத்து, அவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இதற்கிடையே, அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்களை பாதுகாப்பான இடத்துக்கு வெளியேற்றுவதற்காக பாதுகாப்புப் படையினர் சிறிது நேரம் ராணுவ நடவடிக்கையை நிறுத்து விட்டு மீண்டும் துப்பாக்கிச் சூடு நடத்தத் தொடங்கினர்.

அதில், உள்ளூரைச் சேர்ந்த ஐஜாஸ் ஹஃபீஸ், ஷாகித் அயூப் ஆகிய இருவரும் கொல்லப்பட்டனர். இவர்கள் இருவரும் அல்-பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள்.

புல்வாமாவில் அண்மையில் வெளிமாநிலத் தொழிலாளர்கள் மீது நடத்தபபட்ட தாக்குதலிலும், காவல் துறை மற்றும் பாதுகாப்புப் படை வீரர்கள் மீது நடத்தப்பட்ட பல்வேறு தாக்குதல் சம்பவங்களிலும் இவர்களுக்குத் தொடர்பு உள்ளது என்றார் அவர்.

ஆயுத தற்சார்பின் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தும் ரஷிய-உக்ரைன் போர்

புது தில்லி, ஏப்.28: 'ராணுவ தளவாடங்கள் தேவையில் தற்சார்பு நிலை அடைய வேண்டியதன் அவசியத்தை ரஷிய - உக்ரைன் போர் மீண்டும் உணர்த்தியுள்ளது' என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வியாழக்கிழமை கூறினார்.

புது தில்லியில் வியாழக்கிழமை நடைபெற்ற கடற்படை தளபதிகள் மாநாட்டில் பங்கேற்ற ராஜ்நாத் சிங் பேசியதாவது:

எதிர்கால போர்கள் உள்ளிட்ட சவால்களை எதிர்கொள்ள முப்படைகளும் இணைந்த செயல்பாடு மிக அவசியம் என்ற அடிப்படையில், படைப் பிரிவு அமைப்புகளை மாற்றியமைக்கும் மற்றும் முப்படைகளும் ஒருங்கிணைந்த படைபிரிவுகளை (தியேட்டர் கமாண்ட்) உருவாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் முப்படைகள் ஒருங்கிணைந்த கடல்சார் படைப் பிரிவை உருவாக்குவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

உலகின் பாதுகாப்பு சூழலுக்கு எழுந்து வரும் சவால்கள் மற்றும் ரஷிய-உக்ரைன் போர் ஆகியவை ராணுவ தளவாடங்கள் தேவையில் தற்சார்பு நிலை அடைய வேண்டிய அவசியத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ளன.

அந்த வகையில், கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவை ராணுவ தளவாட உற்பத்தி முனையமாக உருவாக்குவதில் மத்திய அரசு கவனம் செலுத்தி வருகிறது. முழுவதும் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட விமானம் தாங்கி போர்க் கப்பலான 'விக்ராந்த்' பயன்பாட்டுக்கு கொண்டுவருவது, இந்த முயற்சியில் மேலும் ஒரு மைல் கல்லாக அமைந்துள்ளது.

இந்த போர்க் கப்பல் மூன்று கடல் சோதனை ஓட்டங்களையும் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. நாட்டின் 75-ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்துக்கு மேலும் ஒரு மகுடம் சேர்க்கும் வகையில், விக்ராந்த் போர்க் கப்பலை இந்திய கடற்படையில் சேர்ப்பதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும்.

மேலும், இந்தியாவில் உள்ள கப்பல் கட்டும் நிறுவனங்களில் 41 கொள்முதல் உத்தரவுகளின்பேரில் 39 கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன.

இந்தியாவின் தற்சார்புத் திறனை அடையும் இலக்கில் கடற்படை முன்னணியில் இருக்கும் நிலையில், அதனை மேலும் ஊக்குவிப்பது அவசியம். நமது பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளுடன் தேசத்தின் கடல்சார் ஆற்றலும் மேம்படுவதை உறுதிப்படுத்த கடற்படை மூத்த அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும்.

இந்தியாவின் இறையாண்மையும் வளமும் பாதுகாப்பு படைகளின் திறனைப் பொருத்தே அமையும். எனவே, வலுவான நம்பகமான இந்திய கடற்படைக்கான அவசியம் தவிர்க்க முடியாததாகும்.

தேசத்தின் வளர்ச்சிக்கும், உலக நாடுகளுடனான பொருளாதார நடவடிக்கைகளுக்கும் கடல் போக்குவரத்தை சார்ந்திருப்பது அதிகரித்து வரும் சூழலில், இந்தியாவின் கடல்சார் நலன்களைக் பாதுகாப்பதிலும், நமது கடல் பிராந்தியத்தில் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதிலும் கடற்படை தொடர்ந்து செயலாற்ற வேண்டும் என்று ராஜ்நாத் சிங் கூறினார்.

குறுகிய கால தாக்குதலுக்கும் படைகள் தயாராவது அவசியம்

விமானப் படைத் தளபதி வி.ஆர்.சௌதரி

புது தில்லி, ஏப்.28: தற்கால சர்வதேச அரசியல் சூழ்நிலை, குறுகிய கால தாக்குதலுக்கும் இந்திய விமானப் படைகள் தயாராக இருக்க வேண்டியது அவசியம் என்பதை உணர்த்தியுள்ளது என்று விமானப் படையின் தலைமைத் தளபதி வி.ஆர்.சௌதரி கூறினார்.

தில்லியில் வியாழக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் அவர் மேலும் பேசியதாவது:

கிழக்கு லடாக்கில் இந்திய-சீன ராணுவத்துக்கு இடையே நீண்ட காலமாக மோதல் போக்கு நிலவி வருகிறது. நீண்ட கால அடிப்படையில் நடக்கும் மோதல்களுக்குத் தயாராக இருப்பது போல், குறுகிய கால தாக்குதலுக்கும் இந்திய விமானப் படை தயாராக இருக்க வேண்டும்.

இந்திய விமானப் படைக்கு அண்மையில் ஏற்பட்ட அனுபவங்களும், தற்கால சர்வதேச அரசியல் சூழலும் இதை உணர்த்தியுள்ளன. குறிப்பாக, அழைப்பு விடுத்த சிறிது நேரத்துக்குள் குறுகிய கால, தீவிரமான தாக்குதலுக்கு படைகள் தயாராக இருக்க வேண்டும். அதற்காக, ஆயுதங்களைக் கொண்டு செல்வதற்கான விதிமுறைகளில் மிகப்பெரிய மாற்றங்களைக் கொண்டுவர வேண்டியுள்ளது. அனைத்து வகையான ஆயுதங்களும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்ற கட்டாயமும் ஏற்பட்டுள்ளது. இதற்காக, அனைத்து முக்கிய ஆயுதங்களையும் உள்நாட்டிலேயே தயாரிக்கும் வகையில் செயல்திட்டம் வகுக்க வேண்டியுள்ளது என்றார் வி.ஆர்.சௌதரி.

இறக்குமதியைக் குறைக்க உள்நாட்டில் 102 பொருள்களின் உற்பத்தி அதிகரிப்பு

வர்த்தக அமைச்சகம் நடவடிக்கை

புது தில்லி, ஏப். 28: இறக்குமதியை குறைக்கும் வகையில், உள்நாட்டில் 102 பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைச்சகத்தின் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

நாட்டின் இறக்குமதியில் ரசாயனம், மின்னணு சாதனங்கள், இன்சுலின் ஊசி உள்ளிடவற்றின் பங்களிப்பு மிக அதிகமாக உள்ளது. குறிப்பாக,102 பொருள்களுக்கு உள்நாட்டில் தேவை மிக அதிகமாக உள்ளது. இருப்பினும் அதனை ஈடு செய்யும் வகையில் உள்நாட்டில் உற்பத்தி இல்லை.

ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், நாட்டின் ஒட்டுமொத்த இறக்குமதியில் 57.66 சதவீத பங்கினைக் கொண்டுள்ள 102 பொருள்களை அதிக முன்னுரிமை அடிப்படையில் உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு உடனடி தலையீட்டின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, தொழில்துறை கூட்டமைப்பு, உற்பத்தியாளர்கள், வர்த்தக தலைவர்கள் உள்ளிட்டோர் திறன் விரிவாக்கத்தை மேற்கொண்டு உற்பத்தியை அதிகரிக்கும் வழிமுறைகள் குறித்து கண்டறிய பரிந்துரைக் கப்பட்டுள்ளது. இது, பொருளாதார வளர்ச்சிக்கு வினையூக்கியாக இருக்கும் என்பதுடன் வேலை வாய்ப்புகளையும் உருவாக்கும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத் அரசு நிர்வாகத்துக்கு கேரள தலைமைச் செயலர் பாராட்டு

அகமதாபாத், ஏப். 28: குஜராத் அரசின் 'சி.எம். டேஷ்போர்டு' திட்டம் மிகவும் சிறப்பானதாகவும், நல்ல நடவடிக்கையாகவும் இருப்பதாக கேரள தலைமைச் செயலர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

குஜராத்தில் கிராம அளவில் செயல்படுத்தப்படும் திட்டங்களைக் கூட முதல்வர் தனது அரசு இல்லத்தில் இருந்துகொண்டே கணினி மற்றும் பெரிய திரைகளின் மூலம் கண்காணிக்கும் 'சி.எம். டேஷ்போர்டு' திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் முதல்வர் அலுவலகத்தில் இருந்து கிராமத்தில் உள்ள நிர்வாக அலுவலரிடம் கூட நேரடியாகப் பேச முடியும்.

இது தொடர்பாக தெரிந்து கொள்வதற்காக குஜராத் மாநிலத்துக்கு கேரள தலைமைச் செயலர் வி.பி.ஜாய் தலைமையிலான அதிகாரிகள் குழு அண்மையில் குஜராத் சென்று வந்தது.

இடதுசாரிகள் ஆளும் கேரளத்தில் இருந்து பாஜக ஆளும் குஜராத்துக்கு நிர்வாக விஷயங்களை தெரிந்து கொள்ள அரசு அதிகாரிகள் சென்றது தொடர்பாக கேரள காங்கிரஸ் ஏற்கெனவே கண்டனம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், கேரள அதிகாரிகள் குழுவின் குஜராத் பயணம் தொடர்பாக குஜராத் அரசு சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில், 'சி.எம். டேஷ்போர்டு' திட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள முதல்வர் இல்லத்தில் சுமார் 3 மணி நேரத்தை கேரள தலைமைச் செயலர் ஜாய் செலவிட்டார். அப்போது, "இதுபோன்ற சிறப்பான முயற்சியை இப்போதுதான் முதல் முறையாக பார்க்கிறேன். அரசுத் திட்டங்கள் தொடர்பாகப் பயனாளிகளிடம் இருந்து முதல்வர் நேரடியாக கருத்துகளைப் பெற முடிகிறது. இது சிறந்த நிர்வாகத்துக்கான புதிய பரிமாணம். குஜராத்தில் உள்ள இந்த நிர்வாக முறை தொடர்பாக அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று பிரதமர் மோடியும் ஒருமுறை குறிப்பிட்டார். கரோனா நேரத்தில் கூட மருத்துவமனை படுக்கைகள் இருப்பு நிலை, ஆக்சிஜன் சிலிண்டர் தேவைப்படும் இடங்கள் போன்றவற்றை முதல்வர் தனது வீட்டில் இருந்தே இந்த நவீன தொழில்நுட்பம் மூலம் தெரிந்து கொண்டு நடவடிக்கை எடுத்துள்ளார்" என்று கேரள தலைமைச் செயலர் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று 39-ஆவது தலைமை நீதிபதிகள் மாநாடு

உச்சநீதிமன்றத்தில் நடைபெறுகிறது

புது தில்லி, ஏப். 28: தில்லியில் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி என்.வி. ரமணா தலைமையில் 39-ஆவது தலைமை நீதிபதிகளின் மாநாடு வெள்ளிக்கிழமை (ஏப். 29) நடைபெறுகிறது.

இதில் 25 உயர்நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகள் பங்கேற்கின்றனர். இந்த மாநாட்டில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் முதல் நீதிமன்ற வளாகத்தில் காணப்படும் உள்கட்டமைப்பு பிரச்னைகள் வரை கலந்துரையாடல்கள், ஆய்வு நடைபெறும் என உச்சநீதிமன்றம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து மாநில முதல்வர்கள், தலைமை நீதிபதிகள் பங்கேற்கும் மாநாடு விஞ்ஞான் பவனில் சனிக்கிழமை நடைபெறுகிறது. இதை பிரதமர் மோடி தொடக்கிவைக்கிறார். இந்த இரு மாநாடுகளும் ஏறத்தாழ 6 ஆண்டுகள் கழித்து நடைபெறுகின்றன.

31 காசு கடன் பாக்கி: விவசாயியை 'துன்புறுத்திய' வங்கிக்கு நீதிமன்றம் கண்டனம்

அகமதாபாத், ஏப். 28: குஜராத்தில் வெறும் 31 காசு கடன் பாக்கி வைத்ததற்காக விவசாயியின் நில விற்பனைக்குத் தடையில்லாச் சான்றிதழ் வழங்க மறுத்த பாரத ஸ்டேட் வங்கிக்கு (எஸ்பிஐ) அந்த மாநில உயர்நீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்ததுடன், இது அவரைத் துன்புறுத்தும் செயல்தானே தவிர வேறு எதுவும் இல்லை என்று கருத்துக் கூறியுள்ளது.

அகமதாபாத் அருகேயுள்ள கோராஜ் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சாம்ஜிபாய். இவரிடம் இருந்து ராகேஷ் வர்மா, மனோஜ் வர்மா ஆகியோர் ஒரு குறிப்பிட்ட நிலத்தை வாங்கியுள்ளனர்.

ஆனால், வருவாய்த் துறை பதிவேடுகளில் பெயரை மாற்றம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதற்கு, விவசாயி சாம்ஜிபாய் அந்த நிலத்தைக் காட்டி எஸ்பிஐ வங்கியில் பயிர்க் கடனாக ரூ.3 லட்சத்தை பெற்றதுதான் காரணம் என்று தெரியவந்தது. இதையடுத்து, சாம்ஜிபாய் கடன் தொகையை முழுமையாகத் திருப்பிச் செலுத்தினார்.

கடனைத் திரும்பிச் செலுத்தி விட்டபோதிலும், அந்த நிலத்தை விற்க தடையில்லாச் சான்றிதழ் வழங்க பல்வேறு காரணங்களைக் கூறி வங்கி மறுத்து வந்தது.

இதையடுத்து, நிலத்தை வாங்கிய தரப்பினர் இது தொடர்பாக குஜராத் உயர்நீதிமன்றத்தை அணுகினர். வழக்கை விசாரித்த நீதிபதி, வங்கிக் கடனைத் திருப்பிச் செலுத்திவிட்டதால் உரிய சான்றிதழை வழங்குமாறு எஸ்பிஐ தரப்பு வழக்குரைஞரிடம் வலியுறுத்தினார். ஆனால், இதற்கு மறுப்புத் தெரிவித்த எஸ்பிஐ தரப்பு வழக்குரைஞர், அந்த விவசாயி மேலும் 31 பைசா கடன் பாக்கி வைத்திருப்பதாகவும், அதனையும் திருப்பிச் செலுத்தினால் மட்டுமே கணினி முறையில் பராமரிக்கப்படும் கடன் பிணையில் இருந்து அவர் விடுபட முடியும்? அந்த நபர் கடனைத் திருப்பிச் செலுத்திவிட்டார் என்று வங்கி மேலாளர் வாய்மொழியாகக் கூற முடியுமே தவிர, தடையில்லா சான்றிதழ் வழங்க முடியாது என்று தெரிவித்தார்.

இந்த பதிலால் அதிருப்தியடைந்த நீதிபதி, '50 காசுக்குக் கீழான கடன் பாக்கியை கணக்கில் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. கடன் வாங்கியவர் ஏற்கெனவே தொகையைத் திருப்பிச் செலுத்திவிட்ட பிறகு, அவரின் நில விற்பனைக்குத் தடையில்லா சான்று வழங்காமல் இருப்பது தவறு. வெறும் 31 காசு கடன் பாக்கிக்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது மிகவும் தவறான செயல். கடன் வாங்கி திருப்பிச் செலுத்திய பிறகு ஏன் அந்த நபரை துன்புறுத்தி வருகிறீர்கள்? அடுத்த முறை வழக்கு விசாரிக்கப்படும்போது வங்கி மேலாளர் நேரில் ஆஜராக வேண்டும்' என்றனர்.

இதையடுத்து, இது தொடர்பாக நீதிமன்றத்தில் விளக்கமான அறிக்கை அளிப்பதாக எஸ்பிஐ தரப்பு வழங்குரைஞர் தெரிவித்தார்.

விசாரணை வரும் மே 2-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பிரதமர் பதவியே இலக்கு; குடியரசுத் தலைவராக விருப்பமில்லை

அகிலேஷ் யாதவுக்கு மாயாவதி பதில்

லக்னௌ, ஏப். 28: ஒடுக்கப்பட்டோரின் விருப்பங்களை நிறைவேற்ற நாட்டின் பிரதமராக விரும்புகிறேனே தவிர குடியரசுத் தலைவராக அல்ல என பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதி தெரிவித்துள்ளார்.

முன்னதாக, உத்தர பிரதேச சட்டப் பேரவைத் தேர்தலில் பாஜக மீண்டும் ஆட்சிக்கு வர பகுஜன் சமாஜ் கட்சி உதவியதாகவும் இதற்கு பிரதிபலனாக மாயாவதிக்கு குடியரசுத் தலைவர் பதவியை பாஜக அளிக்கக்கூடும் என்றும் சமாஜவாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் கூறியிருந்தார். இதற்கு பதிலளித்து லக்னௌவில் செய்தியாளர்களிடம் பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதி வியாழக்கிழமை கூறியது:

அகிலேஷ் யாதவ் உத்தர பிரதேச முதல்வராவதற்கு நான் இடையூறாக இருப்பதால், என்னை குடியரசுத் தலைவராக்க வேண்டுமென சமாஜவாதி கட்சி கனவு காண்கிறது. சட்டப் பேரவைத் தேர்தலில் பல்வேறு கட்சிகளுடன் கூட்டணி அமைத்த போதிலும் சமாஜவாதியால் ஆட்சியமைக்க முடியவில்லை.

நான் உத்தர பிரதேச முதல்வராகவோ அல்லது பிரதமராகவோ வர வேண்டுமென விரும்புகிறேனே தவிர, குடியரசுத் தலைவராக அல்ல. நான் வசதியான வாழ்க்கை வாழவில்லை. அம்பேத்கர், கன்ஷி ராம் காட்டிய பாதையில் அவர்களின் சீடர்களும் ஒடுக்கப்பட்டோரும் தங்கள் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்பதற்காக கடுமையாக பாடுபடுகிறேன்.

எனது லட்சியத்தை பிரதமர் அல்லது உத்தர பிரதேச முதல்வரால்தான் நிறைவேற்ற முடியுமே தவிர குடியரசுத் தலைவரால் அல்ல. தலித்துகள், பிற்படுத்தப்பட்டோர், இஸ்லாமியர்கள், உயர் ஜாதி ஏழைகள் ஆகியோர் பகுஜன் சமாஜ் கட்சியுடன் இணைந்தால், கட்சித் தலைவரை முதல்வராக மட்டுமல்ல, பிரதமராக கூட உயர்த்த முடியும். மாறாக, சமாஜவாதி கட்சி அதன் சுயநல அரசியல் நோக்கங்களுக்காக என்னை குடியரசுத் தலைவராக்க வேண்டுமென கனவு காண்கிறது. அந்தக் கனவு பலிக்காது.

நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலில் சமாஜவாதியும் பாஜகவும் இணைந்து பணியாற்றி, 'ஹிந்து- முஸ்லிம் வண்ணம்' பூசி பாஜக மீண்டும் ஆட்சிக்கு வர வழிவகுத்து விட்டனர். சமுதாயத்தில் பலவீனமான பிரிவினர், குறிப்பாக இஸ்லாமியர்கள் தொடர்ச்சியாக அராஜகத்தை எதிர்கொள்கின்றனர். இதற்கு அகிலேஷ் யாதவ்தான் காரணம் என்றார் மாயாவதி.

யூகோ வங்கி (இந்திய அரசு நிறுவனம்)

திருவள்ளூர் கிளை (2935), மனை எண்.3688, TNHB, பழைய கலெக்டர் ஆபிஸ் ரோடு, காக்களூர், திருவள்ளூர்-602001. போன்:044-27665578/79. மின்னஞ்சல்:thilur@ucobank.co.in

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு (SARFAESI ACT 2002-ன் கீழ்)

அசையா சொத்தை மின்னணு ஏல விற்பனை மூலம் விற்பதற்கான விலைக்குறிப்பீட்டாளர்களுக்கான பொது அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ் வங்கியில் அடமானம் வைக்கப்பட்ட அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்)

இதன் மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில் கீழே விரிவாக விவரிக்கப்பட்டுள்ள, அதிகாரப்பூர்வ அதிகாரி, யூகோ வங்கி (பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குபவர்), அவர்களால் அடையாளப்பூர்வ கவாதீனம் செய்யப்பட்ட அசையா சொத்தானது, "உள்ள இடத்தில் உள்ளவாறான" மற்றும் "உள்ளது உள்ளவாறான" மற்றும் "உள்ள நிலையில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் திரு.கனகராஜ்.J, த/பெ.திரு.ஜெகன்னாதன் & திருமதி.சகாயமேரி, க/பெ.திரு.கனகராஜ்.J, ஆகியோர்களிடமிருந்து யூகோ வங்கிக்கு சேர வேண்டிய பாக்கித் தொகையான ரூ.6,57,612/-ஐ வசூலிக்கும் பொருட்டு 30.05.2022 அன்று விற்பனை செய்யப்படவிருக்கிறது.

* மின்னணு ஏல தேதி மற்றும் நேரம்:30.05.2022-அன்று காலை 11.00 மணி முதல். (வரம்பற்ற கால நீட்டிப்புகளுடன் தலா 10 நிமிட நேரத்திற்கு நடைபெறும்)

கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர் பெயர் & முகவரி / பாக்கித்தொகை / கவாதீன அறிவிப்பு தேதி	சொத்து விபரம்	குறைந்தபட்ச விலை / டேவணித் தொகை (EMD)
கடன்தாரர்கள்: (i) திரு.கனகராஜ்.J, த/பெ.திரு.ஜெகன்னாதன், (ii) திருமதி.சகாய மேரி, க/பெ.திரு.கனகராஜ்.J, இருவரின் விலாசம்: எண்.5-406, பெரியார் நகர், காக்களூர் இண்டஸ்ட்ரியல், காக்களூர், திருவள்ளூர்-602 001. பாக்கித்தொகை: ரூ.6,57,612/- + 26.04.2022-வரையிலான வட்டி உள்ளிட்டது மற்றும் எதிர்கால வட்டி, சட்டப்பூர்வ செலவுகள், கட்டணங்கள் மற்றும் இதர செலவினங்கள். கோரிக்கை அறிவிப்பு தேதி:10.06.2021 கவாதீன அறிவிப்பு தேதி:18.03.2022	திருவள்ளூர் மாவட்டம் மற்றும் தாலுகா, காக்களூர் கிராமம், சர்வே எண்.196/2 பகுதி, EWS-B டைப், மனை எண்.3386, தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் காக்களூர் திட்டத்தில் அமைந்துள்ள 429 சதுர அடி அளவிலான வீட்டு மனை மற்றும் அதனுடன் இணைந்த பகுதிகளும். எல்லைகள்: வடக்கில்: மனை எண்.3387, தெற்கில்: மனை எண்.3385, கிழக்கில்: 16 அடி ரோடு, மேற்கில்: மனை எண்கள்.3404 & 3403. உரிமையாளரின் பெயர்: திரு.கனகராஜ், த/பெ.திரு.ஜெகன்னாதன்.A.	குறைந்தபட்ச விலை: ரூ.18.37 இலட்சம் டேவணித் தொகை: ரூ.1.84 இலட்சம்

விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் 13.05.2022 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ காலை 11.00 மணி முதல் மதியம் 01.00 வரை முன் அனுமதி பெற்று சொத்துக்களை பார்வையிடலாம். விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளை https://ibapi.in, https://ibapi.in/Saleinfo_Login.aspx மற்றும் www.mstcecommerce.com/auctionhome/ibapi/index.jsp- ஆகிய இணையதளங்களில் பார்க்கலாம். மேலும் விபரங்களுக்கு: திரு.விக்னேஷ் புருஷோத்தமா, முதுநிலை மேலாளர், மொபைல்-9840683653-அவர்களை தொடர்பு கொள்ளலாம்.

தேதி: 27.04.2022
இடம்: திருவள்ளூர்

முதன்மை மேலாளர் மற்றும் அதிகாரப்பூர்வ அலுவலர்
யூகோ வங்கி

குறிப்பு: தமிழ் மற்றும் ஆங்கில விளம்பர வாசகங்களில் ஏதேனும் வேறுபாடு இருப்பின் அதே நாளில் தி நியு இண்டியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் பிரகரமான ஆங்கில விளம்பர வாசகங்களே கருத்தில் கொள்ளப்படும்.

கடன் வசூல் தீர்ப்பாயம்-III, சென்னை

வேலு நாயர், கூடுதல் அலுவலக கட்டடம், சாஸ்திரி பவன், ஹாடோஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-600006

O.A. எண்.18 / 2022

யூகோ வங்கி, கொரட்டூர் கிளை, சார்பில் அதன் முதுநிலை மேலாளர், எண்.25, சாந்தி நகர் மெயின் ரோடு, கொரட்டூர், சென்னை - 600 080. ...வாதி

எதிர்

1. M/s.சங்கர் கேல்கெட் புராடெக்ட்ஸ், மூலு உரிமையாளர், திருமதி.சிவகாம சுந்தரி, எண்.98, சென்னை நியூ சிட்டி வேலம்மாள் ஸ்கூல் எதிரில், மேல் அயனம்பாக்கம், சென்னை-600095
2. திருமதி.சிவகாமசுந்தரி, க/பெ.திரு.சாய் நவீன் குமார், எண்.1, சத்யா நகர் விரிவாக்கம், டீச்சர்ஸ் காலனி, கொளத்தூர், சென்னை-600099.

...பிரதிவாதிகள்

பிரதிவாதிகளாகிய உங்களுக்கு மாற்றுச் சேவையாக அனுப்பப்படும் சம்மன்

O.A.எண்.18/2022-ல் யூகோ வங்கி எதிர் 1.M/s.சங்கர் கேல்கெட் புராடெக்ட்ஸ் மற்றும் ஒருவருக்கு எதிராக மாண்புமிகு பதிவாளர், கடன் வசூல் தீர்ப்பாயம்-III, சென்னையில் தாக்கல் செய்யப்பட்ட மனு 11.04.2022 அன்று விசாரணைக்கு வந்தது. மாண்புமிகு பதிவாளர், கடன் வசூல் தீர்ப்பாயம்-III, சென்னை உத்தரவிற்கு இணங்க, பிரதிவாதி 1 & 2 ஆகிய நீங்கள் 10.05.2022 அன்று தீர்ப்பாயத்தின் முன்பு ஆஜராகும்படி இந்த புதிய அறிவிப்பு விளம்பரத்தின் மூலம் வெளியிடப்படுகிறது.

இதன்படி நீங்கள் அறிய வேண்டியது என்னவெனில் மேலே குறிப்பிட்ட தேதியில் (10.05.2022) அன்று காலை 11.00 மணி அளவில் தாங்களோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ தீர்ப்பாயத்தில் ஆஜராக வேண்டியது. தவறும் பட்சத்தில் நீங்கள் இல்லாத நிலையில் விசாரிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும்.

R. செல்வகுமார் மற்றும்
R. சந்திரமோகன்
வாதியின் வழக்கறிஞர்

ஞாயிறுதோறும் தினமணியுடன்... கொண்டாட்டம்

ICICI Bank

கிளை அலுவலகம் : ICICI பேங்க் லிமிட்டெட், SP-24, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை-600058

பொது அறிவிப்பு - ஜாமீன்சொத்துக்கள் விற்பனைக்கான விலைப்புள்ளி மற்றும் ஏல அறிவிப்பு

[பார்க்க விதி 8(6)-இன் விதிமுறைகள்]

அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) ன் கீழ் அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தார